# கிராமிய இலங்கையின் புதிய ஆரம்பத்தைச் சுட்டிக்காட்டும் நீர்

நீர், ஆரோக்கியம், சுகாதாரம் என்பன ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. வாழ்வாதாரத்திற்காக விவசாயம், கால்நடைவளர்ப்பு, சந்தைக்கான தோட்டங்கள் என்பவற்றில் தங்கியிருக்கும் விவசாய சமூகங்களில், இவ்வடிப்படை வசதிகள் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நீர்வளங்கள் குறையும்போது, நீர்பெறும் உரிமை, அதனைப் பெறுவதற்கான சமவாய்ப்புகள் என்பன கிராமிய இலங்கை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது. 2010 ஆம் ஆண்டளவில் சகல மக்களுக்கும் பாதுகாப்பான சிறந்த குடிநீர், போதிய சுகாதாரவசதிகள் என்பவற்றை வழங்குவதாக இலங்கை அரசு தனது மக்களுக்கு உறுதி வழங்கி உள்ளது. இலங்கையின் இராண்டவது சமூக நீர்வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டத்துக்கு (CWSSP ii) உலகவங்கி உதவி வழங்குகின்றது. முக்கியமாக, நீர் மற்றும் ஆரோக்கிய வசதிகளை வழங்குவதும் நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய சேவைகளை வழங்குதல், முகாமைசெய்தல் முதலிய விடயங்களில் மத்திய, உள்ளூராட்சி அரசுகளின் ஆற்றலை வலுப்படுத்தலும் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

கிராம அபிவிருத்தி, வறுமைக் குறைப்பு என்பவற்றைப் பொறுத்தவரையில் நீர் வளங்களிள் விருத்தியும் முகாமைத்துவமும் முக்கியத்துவம் பெறுவதால் இலங்கையில் அவற்றுக்குக் கூடிய முன்னுரிமை வழங்கப்படுகின்றது. கிராமப்புறங்களின் சுகாதாரத்தையும் நலன்களையும் முன்னேற்றும் நோக்கமுள்ள இச் செயற்றிட்டமானது, உள்ளூர் சமூகங்களைத் தமது நீர் மற்றும் சௌக்கியத் திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், முகாமைசெய்தல் என்பற்றில் வலுப்படுத்துவதற்கும் உதவும் வகையில் வரையப்பட்டுள்ளது.

இச்சேவையானது தற்போது பிரச்சினைக்குரியதாக உள்ளது. 10 வீடுகளில் ஒரு வீட்டிற்கே குழாய்நீர் வசதி உண்டு. ஐவரில் ஒருவர் குடிநீரை ஆறுகளிலும் ஊற்றுக்களிலும் பிற பாதுகாப்பற்ற நீர் மூலாதாரங்களிலிருந்தும் பெறுகின்றனர். கிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் வசிக்கும் மக்களில் 30 சதவீதமானோருக்கு பாதுகாப்பான நீர்வளங்களைத் தனியாகப்பெற வசதியுண்டு. சௌக்கிய வசதிகளும் போதுமானதாக இல்லை. கிராமங்களிலும் சிறுநகரங்களிலும் வாழும் மக்களில் 30 சதவீதமானவர்களுக்கு துப்புரவான மலசலகூட வசதிகளில்லை.

நீரைப் பயன்படுத்துவதில் விவசாய, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை சார்ந்தவர்கள், குடும்பங்கள் ஆகியோருக்கிடையே போட்டி வளந்துவருகின்றது. இதனால் நீர்வளத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கையின் வறண்ட வலயங்களில் இந்நிலை காணப்படுகின்றது. மேலும் நீர்வளங்கள் பழுதுபடுவதாலும் ஒழுங்கான, நம்பத்தகுந்த நீர் பரிசோதனைமுறை இல்லாமையாலும் கிராமிய இலங்கையின் மரபுவழி நீர்வளங்கள் அதிக அளவில் பாதுகாப்பற்றனவாகி வருகின்றன. நாட்டில் சுகாதார தராதரங்கள் வீழ்ச்சியடைந்து வருவதற்கு மரபுவழி நீர்வளங்களின் தராதரம் சீர்கேடடைந்து வருவது ஒரு முக்கிய காரணமாகும். நீர்வளங்கள் கிருமிகளினால் பாதிக்கப்படுவதாலும் மோசமாகக் கட்டப்பட்ட குழிமலசலகூடங்களாலும் பல தொற்று நோய்கள் உருவாகின்றன. குறிப்பாகச் சிறுபிள்ளைகள் இதனால் பெரும் பாதிப்படைகின்றனர்.

இந்த செயற்றிட்ட விருத்தியின் குறிக்கோள், கிராம சமூகங்களுக்கான சேவைகளை விரிவு செய்தலும் நீர் மற்றும் சௌக்கிய சேவைகளைத் திறமையாகப் பயன்படுத்த உதவுவதுமாகும். மாகாணசபைகள், பிரதேசசபைகள் என்பவற்றினூடாகப் பன்முகப்படுத்தப்பட்ட முறையில் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இறுதியில் திட்டமிடலுக்குச் சமூகங்களே பொறுப்பேற்க வேண்டும் என்ற அம்சமும் இதில் உண்டு. அவை தமது நீர் மற்றும் சௌக்கியத்துறை சார்ந்த முதலீடுகள் மீது கடப்பாட்டைச் செலுத்துமுகமாக நடைமுறைப்படுத்தல், முதலீட்டுத்திட்டங்களை முகாமைசெய்தல் ஆகிய பொறுப்புக்களை அவையே ஏற்க வேண்டும்.

இவ்வாறான பன்முகப்படுத்தப்பட்ட சேவை வழங்கும் முறைமையினூடாக, இச்செயற்றிட்டமானது மத்திய, மாகாண, உள்ளூர் அரசுகளின் ஆற்றலை வலுப்படுத்த முனைகின்றது. அத்துடன் கிராமப்புறங்களில் உள்ள பிற முதலீடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான திறன்மிக்க ஏனைய தெரிவுகளையும் இச்செயற்றிட்டம் எடுத்துக்காட்டுகின்றது.

சுகாதாரம், நீர்வளங்களைப் பாதுகாத்தல், சுற்றாடலைப பேணுதல் என்பன தொடர்பான கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைபடுத்துவதனூடாக, அறிவுப் பற்றாக்குறை காரணமாக சுகாதாரத் தராதரங்கள் குறைதல், சமூகங்கள் மத்தியில் சுகாதாரம் பற்றிய குறைந்த விழிப்புணர்வு ஆகிய பிரச்சினைகள் அணுகப்படும்.

நீரின் தராதரத்தைப் பரிசோதிக்கும் ஏற்பாடுகளும் இச்செயற்பாட்டில் உண்டு. கிணறுகள் நிலத்தடி நீர்வளங்கள், மேல்நிலை நீர்வளங்கள் என்பவற்றில் காணப்படும் இராசயன பௌதிக மாசுக்களை பரிசோதித்தலும் இதில் அடங்கும். இருக்கக் கூடிய மாசுக்களை இனங்காணலும் இலகுவான பரிசோதனைக் கருவிகளைப் பயன்படுத்தி மாதிரிநீரைப் பரிசோதிக்க சமூக உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்குதல் என்பன மேலதிக அம்சங்களாகும்.

வறுமையை இலக்கு வைத்தல் வெளிப்படையாக கூறப்படாவிட்டாலும் இச் செயற்றிட்டத்தின் பயனாளிகள் வறியவர்களாக இருப்பர். வறுமை மட்டங்களுக்கும் நீர் சௌக்கிய வசதிகளைப் பெறுவதற்குமிடையிலான தொடர்புகள் அதிகமாகவே உள்ளன. செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் கிராமப் புறங்களிலேயே இலங்கையின் வறியவர்களின் 90 சதவீதமானவர்கள் வாழ்கின்றார்கள்.

1993ல் நகரஅபிவிருத்தி வீடமைப்பு அமைச்சானது பதுளை, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் “ சமூக நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய செயற்றிட்டத்தை” நடைமுறைப்படுத்தியது. இச்செயற்றிட்ட மதிப்பீட்டின்படி நீர்வழங்கல் முறைமைகளின் சகல அம்சங்களிலும் பயன்பாட்டாளர்களின் ஈடுபாடானது செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல், அதன் பராமரிப்பு, இயக்கம், நிலைபேறு என்பவற்றில் முன்னேற்றங்காண உதவுகின்றது. முழு அறிக்கையையும் பார்க்க: (சமூகநீர்வழங்கல் மற்றும் ஆரோக்கிய செயற்றிட்டத்துடன் தொடர்புகொள்ள: தாக்க மதிப்பீட்டறிக்கை இலக்கம் 18113).

இச்செயற்றிட்டத்துக்கான மொத்த செலவு 55 மில்லியன் டொலர்கள்: இதில் 33.7 மில்லியன் டொலர்கள் உலக வங்கியினால் மானியமாக வழங்கப்படும். உலக வங்கியானது கிராமிய நீர்வழங்கல் மற்றும் சௌக்கிய அபிவிருத்திக்கென ஆசிய நாடொன்றுக்கு வழங்கிய பெருமளவு மானியம் இதுவாகும்.